George C. Stebbins, 1846-1945 Truehearted



பாமாலை 476 ஏராளம் நன்மைகள்

1 ஏராளம் நன்மைகள் தேவா பொழிந்தீர்
ஆண்டாண்டு தோறும் வழங்கி வந்தீர்
மாறாத அன்பராய் என்றும் இருந்தீர்
நல் மேய்ப்பர் நீரேதாம் நல் மேய்ப்பர் நீர்.

பல்லவி
ஏராளம் நன்மைகள்
ஏராளம் நன்மைகள்
காலையும் மாலையும் காத்திடுவீர்
ஆசீர்வாத மழை ஊற்றிடுவீரே
ஏராள நன்மைகள் ஸ்தோத்திரமே.

2 வானம் பூமி வெள்ளி நட்சத்திரங்கள்
சூரியன் சந்திரன் வான் வெளிகள்
சாட்சியாகும் உமதன்பின் எல்லைக்கு
எண்ணில் அடங்காத நன்மைகட்கு

3 ஜீவிய காலமெல்லாம் விலகாமல்
ஆறுதல் தேறுதல் பாதை காட்டல்
பாவ விமோசனம் சமாதானமும்
அன்பரே எல்லாமே வழங்கினீர்